

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு , பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தலைமையில், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசு செயலாளர் டாக்டர்.செல்வராஜ், பொதுப்பணித்துறை அரசு செயலாளர் மன்கத் ராம் சர்மா, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, ஆகியோர் முன்னிலையில் கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலையிலிருந்து விவேகானந்தர் நினைவு மண்டபம் வரை நடந்து செல்வதற்கான கண்ணாடி இழை தரைத்தள பாலம் அமைக்கும் பணியினை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் .ரெ.மகேஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜி.பிரின்ஸ் (குளச்சல்), .ராஜேஷ்குமார் (கிள்ளியூர்), முனைவர். தாரகை கத்பர்ட் (விளவங்கோடு), உட்பட பலர் உள்ளனர்.

# மதுரை விமான நிலைய வளர்ச்சி குறித்த கோரிக்கைகள்!

## இந்திய விமான நிலைய ஆணையத் தலைவரிடம் எஸ்.ரத்தினவேலு வலியுறுத்தல்!

மதுரை, செப். 6-

இந்திய விமான நிலையங்களின் ஆணையத் தலைவர் எம். சுரேஷிடம் 01.09.2024 அன்று மதுரையில் வேளாண் உணவு தொழில் வர்த்தக சங்கத் தலைவர் எஸ்.ரத்தினவேலு வழங்கிய கோரிக்கை மனு வருமாறு:-

இந்திய விமான நிலைய ஆணையத்தின் தலைவராகப் பொறுப்பேற்றதற்கு வேளாண் உணவு தொழில் வர்த்தக சங்கத்தின் சார்பாக நாங்கள் உங்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகிறோம், மதுரை விமான நிலையத்தின் வளர்ச்சி குறித்து உங்களைச் சந்தித்து எங்கள் கருத்துக்களை தெரிவிப்பதற்கு எங்கள் சங்கப் பிரதிநிதிகளுக்கு நேரம் ஒதிக்கியதற்கு மிக்க நன்றி.

முறையான கோரிக்கைகள் பல வைக்கப்பட்ட போதிலும், மதுரை விமான நிலையத்தின் வளர்ச்சி புறக்கணிக்கப்படுகிறது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம். இதன் விளைவாக, தென் தமிழகத்தைச் சேர்ந்த விமானப் பயணிகள், மதுரை விமான நிலையத்தில் இருந்து நேரடியாக வெளி நாடுகளுக்குச் செல்வதற்கான வசதியை இழந்துள்ளனர்.

### நாள் முழுவதும் செயல்பட வேண்டும்!

மதுரை விமான நிலைய இயக்குநர் 24 7 மணி நேரமும் செயல்படத் தயாராக இருப்பதாக வெகு நாட்களுக்கு முன்னரே தெரிவித்து விட்டார். ஆனால் மதுரை விமான நிலையம் 24 × 7 மணி நேரமும் செயல்படாமல், தற்போதுள்ள உள்கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்தாமல் இருப்பது மிகவும் வருத்தமளிக்கிறது. இரவு தரையிறங்குவதற்கும் புறப்படுவதற்கும் அனைத்து உள்கட்டமைப்புக்களும் மதுரை விமான நிலையத்தில் உள்ளன. மதுரை விமான நிலையம் இரவுப்பணியிலும் செயல்படும் பொழுது அதிக உள்நாடு மற்றும் வெளிநாட்டு விமானங்கள் வந்து செல்வது உண்டு. தற்பொழுது பல சர்வதேச

விமான சேவைகள் 24 x7 வசதி இல்லாததால் பிற விமான நிலையங்களுக்கு திருப்பி விடப்படுகின்றன, இதன் விளைவாக தமிழ்நாட்டின் தெற்கு மற்றும் தென் மத்திய மாவட்டங்களின் தொழில் வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 1, 2023 முதல் மதுரை விமான நிலையத்தில் 24 X 7 மணிநேர செயல்பாடு அறிமுகப்படுத்தப்படும் என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தாலும், அது ஏன் செயல்படுத்தப்படவில்லை என்பது சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்திற்கு மட்டுமே தெரியும். மதுரை விமான நிலையத்தில் போதிய மத்திய தொழில் துறை பாதுகாப்பு படை (C.I.S.F) பணியாளர்கள் இல்லாததே தடையாக உள்ளது. உட்கட்டமைப்புகள் இருந்தும் இரவு பணி இயக்குவதற்கு தேவையான மத்திய தொழில் துறை பாதுகாப்பு படை பணியாளர்களை ஒதுக்குவது இந்திய விமான நிலைய ஆணையத்திற்கு (AAI) அவ்வளவு கடினமான வேலையா? மதுரை விமான நிலையத்தில் இரவு நிறுத்தம் அனுமதிக்கப்பட்டால், மதுரை விமானப் பயணிகள் மகிழ்ச்சியுடன் நள்ளிரவிலும் அதிகாலையிலும் சலுகைக் கட்டணத்தில் பயணம் செய்வார்கள். எனவே 24 X7 செயல்பாட்டை மேலும் தாமதப்படுத்தாமல் துரிதப்படுத்த வேண்டும்.

### அனைத்துலக விமான நிலையமாக அறிவிக்க வேண்டும்!

மதுரை விமான நிலையத்தை இன்னமும் சுங்க விமான நிலையமாகத்தான் வைத்திருக்கிறார்கள். அனைத்துலக விமான நிலையமாக நிலை உயர்த்தப்படவில்லை. நம் நாட்டில் சில விமான நிலையங்களைக் கட்டும் போதே அனைத்துலக விமான நிலையம் என அறிவித்துக் கட்டுகிறார்கள்; ஆனால் இந்தியாவில் உள்ள 10 சுங்க விமான நிலையங்களில் அதிகளவில் பன்னாட்டுப் பயணிகளைக் கையாளும் மதுரை விமான நிலையத்தை, உலகச் சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்கும் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில், ராமேஸ்வரம் மற்றும் கொடைக்கானல் போன்ற பல சுற்றுலா இடங்கள் இருந்தும் கூட அனைத்துலக விமான நிலையம் என அறிவிக்க மறுக்கிறார்கள். நம் நாட்டு விமான நிலையக் கொள்கையைப் புரிந்து கொள்ள முடியவில்லை. மதுரை விமான நிலையத்தின் முன்னேற்றம் வேண்டுமென்றே புறக்கணிக்கப்படுகிறது. இதனால் தென் தமிழகத்தின் தொழில், பொருளாதார வளர்ச்சி தேக்க நிலையிலேயே இருக்கிறது.

காய்கறி, பழங்கள். மலர் மற்றும் வேளாண் உணவுப் பொருட்களுக்கு வெளி நாடுகளில் நல்ல கிராக்கி இருந்தும் தேவையான விமானத் தொடர்பு இல்லாததால் மதுரையிலிருந்து இப் பொருட்களை ஏற்றுமதி செய்ய முடியவில்லை. விளையும் பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்காமல் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். மதுரை விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக அறிவிக்கப்பட்டு, 24x7 மணி நேரமும் செயல்படும் விமான நிலையமாக மாற்றினால் தான் பல வெளிநாடுகளிலிருந்து மதுரைக்கு நேரடி விமான சேவை கிடைக்கும்.

### BASA ஒப்பந்தத்தில் சேர்க்க வேண்டும்!

பிறநாடுகளுடன் நம் நாடு செய்து கொண்டுள்ள "இரண்டு நாடுகளுக்கிடையேயான விமான நிலைய சேவை ஒப்பந்தத்தில்' (Bi lateral Airport Service Agreement BASA) மதுரை விமான நிலையத்தைச் சேர்த்தால் தான் அந்த நாடுகளிலுள்ள விமான நிறுவனங்கள் மதுரைக்கு நேரடியாக விமான சேவை அளிக்க முடியும். துபாய், ஷார்ஜா, அபுதாபி ஆகிய ஐக்கிய அரபு நாடுகளிலும் மற்றும் மலேசியா, சிங்கப்பூர், தோஹா நாடுகளிலும் உள்ள விமான நிறுவனங்கள் மதுரைக்கு நேரடிச் சேவையைத் துவக்க தயாராக இருக்கிறார்கள். ஆனால் நம் நாடு அதற்கு அனுமதி கொடுக்க மறுக்கிறது. காரணம் புரியவில்லை. மதுரையிலிருந்து வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொள்வோர் அதிகளவில் இருந்தும் கூட போதிய விமானங்கள் அல்லது விமானிகள் இல்லாத காரணத்தால், நம் நாட்டு விமான நிறுவனங்கள் மலேசியா, தோஹா, அபுதாபி ஷார்ஜா, குவைத் போன்ற நாடுகளுக்கு விமான சேவை அளிக்க முன்வரவில்லை; துபாய், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் செல்ல தேவையான அளவுக்கு சேவைகளையும் அவர்களால் அளிக்க முடியவில்லை. எனவே முதலில் மேற்கண்ட நாடுகளுடனான விமான சேவை ஒப்பந்தங்களில் மதுரை விமான நிலையத்தை மத்திய விமான போக்குவரத்துத் துறை சேர்க்க வேண்டும்.

இவ்வாறு அவர் தனது கோரிக்கை மனுவில் கூறியுள்ளார்.

### காரைக்குடியில் திராவிடர் கழகத்தின் சார்பில்

# குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு விழா!

## அமைச்சர் கே ஆர்.பெரிய கருப்பன் - கி.வீரமணி வாழ்த்துரை! குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் -மு.தென்னவன் பங்கேற்பு!

சிவகங்கை, செப்.6-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் திராவிட கழகத்தின் சார்பில் கண்ணதாசன் மணி மண்டபத்தில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு விழா திராவிட கழகத்தின் காப்பாளர் சாமி திராவிட மணி தலைமையில் நடைபெற்றது. ம.கு.வைகறை வரவேற்றுப் பேசினார்.

குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு விழாவினை மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். முன்னாள் அமைச்சரும் மாநில இலக்கிய அணி புரவலருமான மு. தென்னவன் குன்றக்குடி அடிகளார் கருத்து பெட்டகம் என்ற நூலைவெளியிட எஸ். மாங்குடி எம்.எல்.ஏ . மேயர்எஸ். முத்துதுரை துணை மேயர் என். குணசேகரன் ஆகியோர் பெற்றுக் கொண்டார்கள்.

திராவிட கழக தலைவர் கி. வீரமணி தவத்திரு குன்றக்குடி அடிகளார் குறித்து சிறப்புரையாற்றினார். தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் ஏற்புரை நிகழ்த்தினார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ.சுப.மதியரசன், பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ். ரவி,ஒன்றிய செயலாளர்கள் சுப.சின்னதுரை, கே.எஸ். ஆனந்த், நிர்வாகிகள் சேவியர்,சன்.சுப்பையா,ஒன்றிய துணைசெயலாளர் முத்து குமார் ஆகியோர் கலந்து கொண்டார்கள் .மாவட்ட திராவிட கழக செயலாளர் சி .செல்வமணி நன்றி கூறினார். விழா ஏற்பாடுகளை காரைக்குடி மாவட்ட திராவிட கழக நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.



கப்பலோட்டிய தமிழர் வ.உ . சிதம்பரனார் அவர்களின் 153வது பிறந்த நாளை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் அமைந்துள்ள அவரின் முழு உருவச் சிலைக்கு இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், எம். எல். ஏ, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் உடன் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், முன்னாள் அமைச்சர் டாக்டர் எஸ் சுந்தர்ராஜன், நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி, வடக்கு நகர் கழக செயலாளர் ஜீவரத்தினம் நகர் கழக பொருளாளர் ஜானகிராமன்,ஒன்றிய செயலாளர்கள் கிருஷ்ணமூர்த்தி, அண்ணாமலை, மற்றும் அவைத்தலைவர் சேட், நகர்மன்ற உறுப்பினர்கள் மாலிக், கிட்டு என்ற கிருஷ்ணன், பிரபா சாலமன்,மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் சர்மிளா ,முன்னாள் நகர் மன்ற உறுப்பினர் கருப்பையா,மற்றும் நகர் கழக, நிர்வாகிகள், தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



பெருமை வாய்ந்த இந்திய விமான நிலையங்கள் ஆணையத் தலைவராக சமீபத்தில் பொறுப்பேற்ற பின் மதுரைக்கு முதன் முறையாக வருகை தந்த எம். சுரேஷை 01.09.2024 அன்று வேளாண் உணவு தொழில் வர்த்தக சங்கத் தலைவர் எஸ்.இரத்தினவேல் தலைமையில் செயலாளர் கே.திருப்பதி ராஜன், துணைத் தலைவர்கள் கே.சுரேஷ் குமார், ஆர்.சரவண குமரன் ஆகியோர் சந்தித்தனர். மதுரை விமான நிலைய மேம்பாட்டிற்கு, பல ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமல் இருக்கும் கோரிக்கைகளான, "மதுரை விமான நிலையம் 24 x 7 நேரமும் செயல்படவேண்டும்", மதுரை விமான நிலையம் "அனைத்துலக விமான நிலையமாக தகுதி உயர்த்தி அறிவிக்கப்பட வேண்டும்", இந்தியா அண்டை நாடுகளுடன் செய்துள்ள "இரு வழி விமான நிலையங்கள் சேவை ஒப்பந்தங்களில்" மதுரை விமான நிலையம் சேர்க்கப்பட வேண்டும் என்பதற்கான தக்க காரணங்களுடன் வலியுறுத்தி கோரிக்கை மடல் சமர்ப்பித்தனர். மதுரை விமான நிலைய இயக்குனர் பி.முத்துக்குமார் உள்ளிட்ட விமான நிலைய அதிகாரிகள் உடனிருந்தனர்.

# மார்த்தாண்டத்தில் உயர்மட்டப் பாலப் பணிகள்!

## அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

குமரி,செப்.6-

கன்னியாகுமரி மாவட்டம், பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, பால்வளத் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, முன்னிலையில் மார்த்தாண்டம் உயர்மட்ட பாலத்தின் கீழ் பகுதியை நேற்று முன்தினம் (04.09.2024) நேரில் பார்வையிட்டு, செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்:-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டிற்குட்பட்ட அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி பகுதிகளில் பல்வேறு திட்டங்களின் வாயிலாக புதிதாக சாலைகள் அமைப்பது, பழுதடைந்த சாலைகளை போர்கால அடிப்படையில் சீரமைப்பது உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித்திட்ட பணிகளை சிறப்பாக மேற்கொண்டு வருவதோடு, மாநில நெடுஞ்சாலைத் துறையின் கீழ் சாலைகளை உறுதிப்படுத்துவது, விரிவுப்படுத்துவது உள்ளிட்ட பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது.

அதன் ஒருபகுதியாக மார்த்தாண்டம் உயர் மட்ட இரும்பு மேம்பாலம் தே.நெ.47ல் கி.மீ.604/314-ல் ஆரம்பித்து கி.மீ.606/705 வரை 2.4 கி.மீ நீளத்திற்கு ரூ.320 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

இந்நிலையில் 07.05.2024 அன்று பாலத்தின் தூண்கள் 101-ற்கும் 102க்கும் இடையில் உள்ள பாலத்தின் ஓடுதளத்தில் கம்பி தெரியும் அளவிற்கு பழுது ஏற்பட்டது. இதனை சரி செய்யும் பொருட்டு தலைமைப் பொறியாளர் (நெ) புலனாய்வு மற்றும் வடிவமைப்பு சென்னை 08.05.2024 அன்று உடனடியாக பார்வையிட்டு அவர்களின் அறிவுரைகளின் அடிப்படையில் நுண்நுட்ப கான்கிரீட் மூலம் 10.05.2024 அன்று தார் சாலை போடப்பட்டு அன்றே சாலை போக்குவரத்துக்கு திறக்கப்பட்டது. இது தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறையின் சாதனையாகும்.

மேலும் சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்கு வரும் சாலையில் 12 கி. மீட்டர் தூரம் வண்டி வாகனங்கள் செல்லுவதற்கு ஏதுவாக சாலையை சீரமைத்து தருமாறு அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர்கள் என்னிடம் கோரிக்கை வைத்துள்ளார்கள். அதனை விரைந்து சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் மார்த்தாண்டம் மேம்பாலம் மற்றும் மேம்பாலத்தின் கீழ் அமைந்துள்ள சாலைகளை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு , செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

நடைபெற்ற ஆய்வுகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜி.பிரின்ஸ் (குளச்சல்), ராஜேஷ்குமார் (கிள்ளியூர்), முனைவர். தாரகை கத்பர்ட் (விளவங்கோடு), நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் டாக்டர். செல்வராஜ், தொழில்நுட்ப சிறப்பு அலுவலர் சந்திரசேகர், கண்காணிப்பு பொறியாளர்கள் திருமதி.ஜெயராணி, திருமதி.சாந்தி, தலைமை பொறியாளர் பன்னீர் செல்வம், நெடுஞ்சாலைத்துறை கோட்ட செயற்பொறியாளர் சத்தியமூர்த்தி, குழித்துறை நகர் மன்ற தலைவர் ஆசை தம்பி, துறை அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

### கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. நடத்தி வைத்து வாழ்த்துகிறார்!

# சிவகங்கை மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் ஆதி.கண்ணாத்தாள் இல்ல மணவிழா!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை! அமைச்சர்கள் தங்கம் தென்னரசு – எஸ்.ரகுபதி – சிவ.வீ.மெய்யநாதன் வாழ்த்துரை! மு.தென்னவன் வரவேற்புரை!

சென்னை, செப்.6-

சிவகங்கை மாவட்ட தி.மு.க. பொதுக் குழு உறுப்பினர் திருமதி.ஆதி. கண்ணாத்தாள்-ஆதி.ஆதியான் ஆகியோரது புதல்வர் ஆதி.இராமசாமி-கோவை பெ.அ.நா. அன்புநாதன்-சீதா ஆகியோரின் புதல்வி அ.சுவேதா ஆகியோரின் திருமணம், இன்று (6.9.2024-வெள்ளிக்கிழமை) காலை 9.30 மணியளவில் காரைக்குடி - பாண்டியன் திரையரங்கம் அருகில் உள்ள சுபலெட்சுமி பேலசில் நடைபெறுகிறது.



மணவிழாவிற்கு மாவட்டச் செயலாளர் - கூட்டுறவுத் துறை அமைச்சர் கே. ஆர். பெரியகருப்பன் தலைமை வகிக்கிறார்.

அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

முன்னாள் அமைச்சர் முனைவர் மு. தென்னவன் வரவேற்புரையாற்றுகிறார்.

திருமணத்தை கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. நடத்தி வைத்து - மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.

குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப. சிதம்பரம், காரைக்குடி மாநகராட்சி மேயர் சே. முத்துதுரை, முன்னாள் எம்.எல்.ஏ., கே.ஆர்.இராமசாமி, கார்த்தி சிதம்பரம் எம்.பி., மாங்குடி எம்.எல்.ஏ., தமிழரசி ரவிகுமார் எம்.எல்.ஏ., ராம.கரு. மாணிக்கம் எம்.எல்.ஏ., திராவிடர் இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப. வீரபாண்டியன், மாநில மகளிரணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் ஆகியோர் வாழ்த்தி உரையாற்றுகின்றனர்.

கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா. சந்திரசேகர், முன்னாள் எம்.பி., பவானி இராஜேந்திரன், ஏ.ஆர்.வீ.காசிநாதன், இன்பா ரகு, ஜி.பி.ராஜா, பி.எல்.படிக்காசு, டி. செந்தில்குமார்

மாவட்ட கழக நிர்வாகிகள் அ.கணேசன், த.சேங்கைமாறன், சுப.துரைராஜ்,

ஆர்.ஜோன்ஸ் ரூசோ, பா.செந்தில்குமார், கதிர். ராஜ்குமார், என்.நல்லசேதுபதி, துரை.கருணாநிதி அம்பலம், ஏ.வேலுச்சாமி,

சி.இலக்குவன், பூரண சங்கீதா, ம.சேசுராசு , சுப. கருப்பையா, சாமி.திராவிடமணி,தி.என்.ஆர்.எஸ். பிராட்லா.

தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் தா.ராமையா, அ.முகமது, கரு.அசோகன், தெய்வானை இளமாறன், கே.எஸ்.ரவி, ஜெ.மதார் சேட், த.உதயகுமார், பி.டி. ஆர்.முத்து, எம்.சோமசுந்தரம்,

பெ.பெருமாள், ஆர். சிங்காரம், திருமதி. ஏ.இ.ஆர்.சுரேஷ்குமார், கு. ராஜாங்கம், என்.அம்பல முத்து ஏ.ஆர்.ஜெய மூர்த்தி உள்பட பலரும் திருமணத்தில் கலந்துகொண்டு வாழ்த்துகிறார்கள்.

ஆதி.ராஜ்கணேஷ் நன்றி கூறுகிறார்.



செக்கெழுத்த செம்மல் கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரனார் அவர்களின் 153 வது பிறந்த நாளை முன்னிட்டு நெல்லை டவுண் வலம்புரி அம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள வ.உ.சிதம்பரனார் உருவ சிலைக்கு மாநகராட்சி மேயர் கோ.ராமச்சந்திரன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாமன்ற உறுப்பினர் சுப்பிரமணியின், பகுதி துணைச் செயலாளர் அப்துல் சுபஹானி,தகவல் தொழில்நுட்ப அணி காசிமணி, வட்ட செயலாளர் சுந்தர்ராஜன், வட்ட பிரதிநிதி ஷேக் பிள்ளை, ஹரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.